1979 மார்ச் 5]

சேத்துப்பட்டு பேருந்து நிலையம்.

* வினா எண். 230 — திரு. ப. சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு சேத்துப்பட்டு நகரத்தில் பேருந்து நிலையம் இருந்தும் அதில் பேருந்துகள் நிற்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் என்றால், அந்த பேருந்து முதலாளிகளின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) சேத்துப்பட்டு-ஆரணி சாலையில் சேத்துப்பட்டு நகரிலிருந்து சுமார் ஒன்றரை பர்லாங்கு தொலைவில் அமைந்துள்ள சேத்துப்பட்டு பேருந்து நிலையம், பயணிகள் தங்குவதற்கு ஏற்ற வகையிலும், குடி தண்ணீர், மின்சார விளக்குகள், பேருந்துகள் புறப்படும் நேரங்கள் குறிப்பிடப்பட்ட அறிவிப்புப் பலகை, மற்றும் பெண் பயணிகள் உட்காருவதற்கு ஏற்ற தனியிடம் போன்ற வசதிகள் இல்லாமையாலும், திருட்டு பயத்தினாலும், பொது மக்கள் இப்பேருந்து நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு விருப்பமில்லாதவர்களாயிருந்தனர். ஆனால் சேத்துப்பட்டு நகரப் பஞ்சாயத்திற்குச் சொந்தமான இப்பேருந்து நிலையத்தில் மேற்குறிப்பிட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, இவ்வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் தற்போது இப்பேருந்து நிலையத்தில் நின்று பின்னரே செல்லுகின்றன.

திரு. ப. சந்திரன்: தலைவர் அவர்களே, இது குறித்து நான் வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் புகார் செய்திருக்கிறேன். அதிகாரிகள் இப்போது தவறாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இப்போதும் அங்கே பேருந்துகள் நிற்பதில்லை. ஆகவே இனிமேலாவது பேருந்துகள் அங்கே நிற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஏதேனும் பேருநதுகள் அந்தப் பேருந்து நிலையத்தில் செல்லாமல் இருக்குமானால் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு கடும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறேன்.